
RS Polyclinic
MULTI SPECIALITY DOCTORS
Dr. M. Rajkumar
MBBS, MS (ENT), DNB (ENT), FRCS (Edinburgh)
9543023598
Sr Vascular Surgeon
Dr. K. Nagendra Bhuvaneswari
M.S. (Ophthalmology)
9444 288784
Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar
MBBS, MS (Gen), DNB (Gen Surg), MRCS (Edinburgh)
9445 401793
Laparoscopic & Laser Surgeon
Dr Bharathi R
MBBS, MS (ENT), DNB (ENT)
9894 650945
Sr Vascular Surgeon
Dr Sabina R
MBBS, MD
97780 97742
General Physician
Dr Praveena E
MBBS, MS (ENT)
9944 100443
Sr ENT Surgeon

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkural@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Karumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டம்: 600 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் விநியோகம்



சென்னை – 13 நவம்பர், 2026 மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறையால் 2019-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டம் பொது விநியோக நடைமுறையில் மிகப்பெரிய மாற்றத்தை மிகப்பெரிய ஏற்படுத்தியுள்ள சீர்திருத்த நடவடிக்கையாகும். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் புதிய குடும்ப அட்டை பெறாமலேயே நாட்டின் எந்தப் பகுதியிலும் உள்ள நியாயவிலைக் கடைகளில் தங்களுக்குரிய உணவு தானியங்களைப் பெற இத்திட்டம் வழிவகை செய்கிறது. குறிப்பாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், இடம்பெயரும் குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த, பயனாளிகளை மையப்படுத்திய நலத்திட்ட விநியோக அமைப்பாக இது உருவெடுத்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள 36 மாநிலங்கள் & யூனியன் பிரதேசங்களிலும் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டப் பயனாளிகள் 100% இத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ், மாதந்தோறும் சுமார் 3.27 கோடி பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன. திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை மாநிலங்களுக்கு இடையேயும், மாநிலங்களுக்கு உள்ளேயும் 233 கோடிக்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகள் பதிவாகி, 614 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பொது விநியோக முறையில் வெளிப்படைத்தன்மையையும், நாட்டின் கடைக்கோடி மக்களுக்கும் உணவு தானியங்கள் சென்றடைவதையும் உறுதி செய்ய மத்திய அரசு பல்வேறு தொழில்நுட்ப ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2026 அக்டோபர் நிலவரப்படி, அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் சுமார் 78.65 கோடி பயனாளிகளின் விவரங்கள் 100 சதவீதம் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளன. மத்தியத் தொகுப்பில் உள்ள 20.51 கோடி குடும்ப அட்டைகளில் 98.8% ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 76.97 கோடி பயனாளிகளின் ஆதார் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், 2026 செப்டம்பர் 30 வரை 71.52 கோடி பயனாளிகளிடம் மின்னணு வாடிக்கையாளர் சரிபார்ப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன. நாடு முழுவதும் உள்ள 5.51 லட்சம் நியாயவிலைக் கடைகளில் 99.8 சதவீதக் கடைகளில் மின்னணு விற்பனை கருவிகள் செயல்பாட்டில் உள்ளன.

விவரங்கள் சரிபார்ப்பின் மூலம் தகுதியற்ற, போலிப் பதிவுகள் கண்டறியப்பட்டு நீக்கப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டத்தில் 2.58 கோடி போலிப் பதிவுகளும், அடுத்த கட்டத்தில் 68 லட்சம் பதிவுகளும் நீக்கப்பட்டு தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு உணவு தானியங்கள் சென்றடைவது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2031 மார்ச் 31 வரை செயல்படுத்தப்படும் 'சார்த்தக்' - பொது விநியோகத் திட்டத்தின் கீழ், கொள்முதல் முதல் விநியோகம் வரை தரவுக் கட்டமைப்பு, வாகன கண்காணிப்பு அமைப்பு ஆகிய நடைமுறைகள் நிர்மல், சக்ஷம் ஆகிய முன்னெடுப்புகள் மூலம் வலுப்படுத்தப்படுகின்றன.

பயனாளிகள் தங்களுக்குரிய மாதாந்திர உணவு தானிய ஒதுக்கீடு, முந்தைய பரிவர்த்தனை விவரங்கள், ஆதார் இணைப்பு நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், அருகிலுள்ள நியாயவிலைக் கடைகளை ஜிபிஎஸ் மூலம் கண்டறியவும் 13 மொழிகளில் 'மேரா ரேஷன்' கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பச் சீர்திருத்தங்கள் மூலம் நாடு முழுவதும் உள்ள பயனாளிகள் தாங்கள் வசிக்கும், பணிபுரியும் இடங்களிலேயே உணவு தானியங்களைப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது நாட்டின் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறது.